**கவனிக்க -** 14.11.2025 ஆந் திகதிய 2463 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2464 - 2025 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2025.11.21**

2464 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 2 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | 5 |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 9 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82740 - 5403 (2025/11)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையினால் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகளென வெளியிடப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் எதிர்ப்புகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனின், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(3) ஆவது பிரிவின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர்.ஏ. எஸ். இந்துனில் கருணாரத்ன,
தவிசாளர்,
ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.

1. பாதையின் பெயர் : எம்புள்புர கொஸ்ஹின்னகொட பாதை (சாம மாவத்த)
2. கிராம அலுவலர் பிரிவு: 453 எம்புள்புர கிராம அலுவலர் பிரிவு

ஆரம்பம்: அறநெறிப் பாடசாலைக் கட்டடத்தின் எதிரில் உள்ள பாதை
முடிவு: திருமதி காந்தி தொடம்தென்ன என்பவரது வீடு

**வலதுபுறம்:**

1. திரு. ஈ.ஜீ.எஸ். வர்ணதிலக்க, இல. 135/4, எம்புள்புர, நுகவெல.
2. திருமதி டி.ஜீ., காந்தி, இல. 135/3, எம்புள்புர, நுகவெல.
3. திரு. டி.ஜீ. ரோஹன் குமார, இல. 185, எம்புள்புர, நுகவெல.

**இடதுபுறம்:**

1. திருமதி ஜீ.ஜீ.ஜீ.ஜீ. ஜயவீர, இல. 135/4, எம்புள்புர, நுகவெல.
2. திரு. ஈ.ஜீ.எம்.ஆர். வர்ணதிலக்க, இல, 135/3, எம்புள்புர, நுகவெல.
3. திரு. பி.ஜீ.ஐ.கே. விஜேவிக்ரம, இல. 35/6, எம்புள்புர, நுகவெல.
4. திரு. கே.ஏ.ஜீ.ஜே. ரோஹன, இல. 135/3/A, யொஹான் நிவஸ, எம்புள்புர, நுகவெல்.
5. திரு. எஸ்.ஆர்.எஸ்.எஸ். பண்டார இல. 135/3/B, எம்புள்புர, நுகவெல.

பாதையின் அகலம் : 10 அடி
பாதையின் நீளம் : 181.5 மீற்றர்

நில அளவை வரைபடம்: நில அளவையாளர் திரு. சீ.எஸ். லியனகே என்பவரால் அளவீடு செய்யப்பட்ட 3285 ஆம் இலக்க அளவீட்டு வரைபடம்

11-234

**கேகாலை நகர சபை**

**வரைவு பட்ஜெட் - 2026**

நகரசபைச் சட்டத்தின் பிரிவு 212(b) இன் கீழ் அறிவிப்பு (அதிகாரம் - 252)

2026 ஆம் ஆண்டுக்கான கேகாலை நகரசபையின் பட்ஜெட் ஆவணம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அது 2025, நவெம்பர் மாதம் 21 ஆம் தேதி முதல் 2025, நவெம்பர் மாதம் 27 ஆம் தேதி வரை, அலுவலக நேரங்களில் கேகாலை நகரசபை ஆணையாளரின் அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

ஆர். ஜி. என். கருநாரத்ன,
மாநகர் மேயர்,
கேகாலை நகர சபை.

11-296

---

**மகரகம நகர சபை**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (255 ஆவது அத்தியாயம்) 50 மற்றும் 52 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விடுக்கப்படுகின்ற அறிவித்தல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 50 மற்றும் 52 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் மகரகம பிரதேச செயலகப் பிரிவின் மகரகம நகர சபை எல்லையில் அமைந்துள்ள கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் மகரகம நகர சபைக்குரிய வீதிகளாக பிரகடனப்படுத்துவதற்கு பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது மக்கள் அல்லது ஏற்புடைய ஆதன உரிமையாளர்கள் ஆட்சேபனை தெரிவிப்பார்களானால், அவ்வாறு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானப் பத்திரம் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்துமூலமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

இக் காலப்பகுதியில் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்படாத பட்சத்தில், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளாக அங்கீகரிக்கப்பட்டு நிருவகிக்கப்படுமென பொது மக்களின் தகவலுக்காக இத்தால் அறியத் தருகின்றேன்.

எஸ்.எம். சமன் சமரகோன்,
தவிசாளர்,
மகரகம நகர சபை.

நகர சபை அலுவலகம்,
மகரகம,
2025 ஒற்றோபர் 17.

இணைப்பு 1

மகரகம நகர சபை

| *வீதியின் பெயர்* | *கிராம அலுவலர் பிரிவு* | *திட்ட இல மற்றும் நில அளவையாளரின் பெயர்* | *வீதியின் நீளம் (மீற்றர்)* | *வீதியின் அகலம் (மீற்றர்)* | *வீதியின் தொடக்கம் (சோலை வரி இல.)* | *வீதியின் முடிவு (சோலை வரி இல.)* |
|---|---|---|---|---|---|---|
| மாகும்புர ஹைலெவல் வீதியின் சோலை வரி இல 455/5 இல் தொடங்கி சோ.வ இல 455/4 இல் நிறைவு பெறும் உள் வீதி | மாகும்புர தெற்கு | வரைப்பட இல. 239 - லொட் iE விக்டர் சந்திரதாச | 50.5 | 4.06 - 3.05 | 455/5 | 455/4 |

11-302

**காலி மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கம் கொண்ட சமூகவிடுதிகளுக்கு அனுமதிப்பத்திரத்தின் கீழ் பிரேரணைகள்

இங்கு கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டவர் மூலம் அவரின் பெயருக்கு எதிரே காணப்படும் இடத்தில் கேளிக்கை விடுதியொன்றை நடாத்துவதற்கு 2026 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு என்னிடம் விண்ணப்பித்துள்ளதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கொண்ட கேளிக்கை விடுதிகளுக்கான அனுமதிப்பத்திரம் கொடுக்கும் சட்டடத்தின் 06 வது பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகிறது.

இந்த கேளிக்கை விடுதிக்கு அருகில் ஒருகேளிக்கை விடுதிக்காக திட்டமிட்டுள்ள இடத்தின் அருகில் வசிக்கும் யாதேனும் அந்த கேளிக்கை விடுதிக்காக அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு எதிர்ப்பதாயின் இந்த அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாகிய தினத்திலிருந்து நான்கு மாதங்களுக்குள் தமது எதிர்ப்புக்கான காரணங்களை இரண்டு பிரதிகளில் எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்கும்படி இத்தால் அறியத்தருகிறேன்.

சுனில் கமகே,
நகர முதல்வர்,
காலி மாநகர சபை.

காலி மா நகர சபை அலுவலகம்,
2025, நவெம்பர் 10.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *சமூக விடுதியின் தலைவர்/ செயலாளர்* | *கேளிக்கை விடுதி பெயர்* | *கேளிக்கை விடுதியின் பணிகளை நடத்த எதிர்பார்க்கும் இடம்* |
|---|---|---|---|
| ருவன் கலப்பத்தி | செயலாளர் | காலி கிரிகெட் ஒன்றியம் | இல.03 பீ காலிதேசிய கிரிகெட் மைதானம் கொழும்பு வீதி காலி. |

11-303

---

**மிஹிந்தலை பிரதேச சபை**

மாடறுப்பு கட்டளைச் சட்டம் (272 வது அதிகாரம்) கீழ் மாடறுப்பு இடத்தை கொண்டு நடாத்துவதற்கு எதிர்ப்புகள் தெரிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் மற்றும் மாடறுப்பு கட்டளைச் சட்டம் (272 வது அதிகாரம்) 7 (1) உறுப்புரையின் கீழ் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரால் அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இறைச்சியின் நிமித்தம் பசு மாடு அறுத்தல் இடம் ஒன்றை கொண்டு நடாத்துவதற்கு 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது எனவும், அதன் படி அனுமதிப்பத்திரம் வழங்குவது பற்றி மிஹிந்தலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வதியும் எவரேனும் ஒரு நபர் எதிர்ப்பு செய்யின், அவன் அல்லது அவள் எதிர்ப்பது எந்த காரணத்திற்கு என்பது பற்றி இரண்டு பிரதிகள் அடங்கிய எழுத்து மூல கூற்று மூலம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *மாடறுப்பு செய்யும் இடம்* | *தன்மை* |
|---|---|---|
| திரு எம்.எஸ்.எம்.அஸ்மி | கனந்தராகட்டுகெலியாவ இஹலகம, மிஹிந்தலை | இறைச்சியின் நிமித்தம் பசு மாடு அறுத்தல் |

வை.ஜீ. தர்மதாச
தலைவர்,
மிஹிந்தலை பிரதேச சபை,
மிஹிந்தலை.

பிரதேச சபை அலுவலகம்,
மிஹிந்தலை.
2025 செத்தெம்பர் 03.

11-318

---

# வரவு செலவுத் திரட்டுகள்

## கருவலகஸ்வெவ பிரதேச சபை

2024 திசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி நிலை பற்றிய வெள்யீடு

| | *குறிப்பு* | *(ரூ.)* *31/12/2024* | *(ரூ.)* *31/12/2024* |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடப்பு அல்லாத சொந்துக்கள்** | | | |
| ஆலைகள் மற்றும் உபகரணங்கள் | 06 | 935,364,425.01 | 286,926,301.86 |
| **முதலீடு** | | | |
| நிலையான வைப்பு | 07 | 2,500,000.00 | 1,764,225.84 |
| **நிலையற்ற சொத்துக்கள்** | | | |
| மொத்த | 08 | 9,112,584.51 | 5,158,165.17 |
| பணியாளரகள் கடன் | 09 | 3,744,655.45 | 3,629,232.04 |
| கிடைக்க வேண்டியவை | 10 | 11,448,458.62 | 14,046,858.83 |
| முதலீடு | 11 | 351,043.39 | 334,568.75 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 12 | 4,665,373.01 | 3,565,485.55 |
| மொத்த சொத்துக்கள் | | **967,186,539.99** | **315,424,838.04** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடப்பு அல்லாத பெறுப்புக்கள் | 13 | 10,946,814.30 | 12,495,487.50 |
| நிலையற்ற பொறுப்புக்கள் | 14 | 6,448,008.30 | 13,530,394.10 |
| உரீத்து | 15 | 949,791,717.39 | 289,398,956.44 |
| **மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **967,186,539.99** | **315,424,838.04** |

**கருவலகஸ்வெவ பிரதேச சபை**

2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான
கணக்கு குறிப்புகள்

| *விபரம்* | *அட்ட வணை இல.* | *2024.01.01 திகதியில் நிலுவை* | *சேர்த்தல் 2024* | *அகற்றுதல் 2024* | *2024.12.31 திகதியில் நிலுவை* | *2023.12.31 திகதியில் நிலுவை* |
|---|---|---|---|---|---|---|
| குறிப்பு 06 ஆதனங்கள், பயிர்கள் மற்றும் உபகரணம் | | | | | | |
| 111 காணி மற்றும் கட்டடங்கள் | 1 | 2025,119,105,50 | 647, 677, 000.00 | - | 852,796,105,50 | 205,119,105,50 |
| 112 தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 2 | 10,610,649.30 | 708,592.00 | - | 11,319,241.30 | 10,610,649.30 |
| 113 மோட்டார் வாகனங்கள் மற்றும் கரத்தைகள் | 3 | 62,568,000.00 | 3,000,000.00 | 2,935,000.00 | 62,633,000.00 | 62,568,000.00 |
| 114 மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 4 | 4,259,040.26 | - | - | 4,259,040.26 | 4,259,040.26 |
| 115 வாசிகசாலை புத்தகங்கள் | 5 | 3,877,101,80 | 46,330.00 | 58,798,85 | 3,864,632.95 | 3,877,101.80 |
| 116 சிறுவர் பூங்கா உபகரணங்கள் | 6 | 492,405.00 | - | - | 492,405.00 | 492,405.00 |
| **மொத்தம்** | | **286,926,301.86** | **651,431,922.00** | **2,993,798.85** | **935,364,425.01** | **286,926,301.86** |
| **குறிப்பு 07** | | | | | | |
| நிலையான வைப்பு | | | | | 2,500,000.00 | 1,764,225.84 |
| **மொத்தம்** | | | | | | |
| **குறிப்பு 08** | | | | | | |
| இருப்புகள் | | | | | | |
| 121 பொதுவான சேகரிப்பு நிலையங்கள் | 7 | | | | 1,098,700.56 | 2,437,425.56 |
| 122 நீர் சேகரிப்பு நிலையங்கள் | 8 | | | | 7,305,283.34 | 1,966,580.00 |
| 123 மின் சேகரிப்பு நிலையங்கள் | 9 | | | | 338,022.00 | 383,581.00 |
| 124 குழாய் கிணறு நிலையங்கள் | 10 | | | | 370,578.61 | 370,578.61 |
| 125 கூலாங்கற்கள் திட்டத்தின் மொத்தம் | 11 | | | | - | - |
| **மொத்தம்** | | | | | **9,112,584.51** | **5,188,165.17** |

| *விபரம்* | *அட்ட வணை இல.* | *2024.01.01 திகதியில் நிலுவை* | *சேர்த்தல் 2024* | *அகற்றுதல் 2024* | *2024.12.31 திகதியில் நிலுவை* | *2023.12.31 திகதியில் நிலுவை* |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| **குறிப்பு 09** பணியாளர் கடன்கள் | | | | | | |
| 140 ஊழியர் கடன் | 12 | | | | 3,744,685.45 | 3,629,232.04 |
| **மொத்தம்** | | | | | **3,744,685.45** | **3,629,232.04** |
| | | | | | | |
| **குறிப்பு 10** கிடைக்கவேண்டியவை | | | | | | |
| 161 நிலுவையான ஆதன வரி | 13 | | | | 615,652.53 | 683,316.64 |
| 162 வாடகை நிலுவை | 14 | | | | 672,145.97 | 641,395.28 |
| 165 நிலுவையான நீர்வரி | 15 | | | | 2,775,401.50 | 2,593,303.00 |
| 166 பல்வேறு கடனாளிகள் | 16 | | | | 4,848,859.63 | 3,626,084.72 |
| 168 தொழில் சார் கடனாளிகள் | 17 | | | | 2,224,147.16 | 6,385,507.36 |
| | | | | | | |
| 172 கிடைக்கவேண்டியவை | 18 | | | | 317,251.83 | 217,251.83 |
| **மொத்தம்** | | | | | 11,448,458.62 | 14,046,858.83 |
| **குறிப்பு 11** முதலீடுகள் | | | | | | |
| 182 ஊழியர் பாதுகாப்பு வைப்பீடுகள் | 19 | | | | 351,043.39 | 334,568.75 |
| **மொத்தம்** | | | | | 351,043.39 | 334,568.75 |

## கருவலகஸ்வெவ பிரதேச சபை

### 31.12.2024 ஆம் திகதியில் முடிவுறும் ஆண்டுக்கான கணக்கு குறிப்புகள்

| விபரம் | அட்டவணை இல. | 31.12.2024 ஆம் திகதியில் நிலுவை | 31.12.2023 திகதியில் நிலுவை |
|---|---|---|---|
| **குறிப்பு 12** நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | | | |
| 191 இலங்கை வங்கி கணக்கு இல. 1779975 | - | 1,270,156.31 | 1,809,084.33 |
| 192 இலங்கை வங்கி கணக்கு இல. 6466952 | - | 998,030.11 | 922,141.27 |
| 193 இலங்கை வங்கி கணக்கு இல. 71132011 | | 2,062,372.26 | 535,990.06 |
| 194 இலங்கை வங்கி கணக்கு இல. 8305531 | | 258,270.50 | 223,717.80 |
| 195 தே.சே. வங்கி கணக்கு இல. 552791 | | 76,393.83 | |
| 196 முத்திரை | 20 | 150.00 | 275.00 |
| 197 இலங்கை வங்கி கணக்கு இல. 76838688 | - | - | - |
| இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | - | - | - |
| **மொத்தம்** | - | **4,665,373.01** | **3,565,485.55** |
| **குறிப்பு 13** நடைமுறையில்லாத பொறுப்புக்கள் | - | | |
| 221 தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | - | | 12,495,587.50 |
| **மொத்தம்** | | | **12,495,487.50** |
| **குறிப்பு 14** நடைமுறை பொறுப்புக்கள் | - | | |
| 231 பல்வேறு கடனாளிகள் | 21 | 2,386,004,23 | 2,007,627.21 |
| 232 கைத்தொழில் கடனாளிகள் | 22 | 1,229,346.20 | 9,073,502.33 |
| 233 முத்திரை கட்டணம் | 23 | 5,950.00 | 5,825.00 |
| 241 முன்பு பெற்ற வருமானம் | 24 | 129,496.29 | 488,245.16 |
| 252 வருமானத்திற்கு பதிலான வைப்பீடுகள் | 25 | 1,300,027.28 | 1,360,347.28 |
| 257 பல்வேறு வைப்பீடுகள் | 26 | 1,397,184.30 | 594,847.12 |
| **மொத்தம்** | | **6,448,008.30** | **13,530,394.10** |
| **குறிப்பு 15** உரிமைகள் திரட்டிய நிதியம் | - | | |
| 211 திரட்டப்பட்ட நிதி கணக்கு | - | 14,427,292.38 | 2,472,654.58 |
| 212 மூலதனச் செலவினத்திற்கான வருவாய் பங்களிப்பு | - | 935,364,425.01 | 286,926,301.86 |
| **மொத்தம்** | | **949,791,717.39** | **289,398,956.44** |

# நானாவித அறிவித்தல்கள்

## எம்பிலிபிட்டிய பிரதேச சபை

### வியாபார வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான எண் 06(20) I இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, அச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட துணைச் சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் பெறுதல் அல்லது அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வரி செலுத்துதல் தேவையில்லாத வியாபாரமொன்றை எம்பிலிபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் 2026 ஆம் ஆண்டில் நடாத்தும் ஒவ்வொரு நபரிடமிருந்தும், அவ்வியாபாரத்தின் 2025 ஆம் ஆண்டு வருமானம் இங்கு கீழே உள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் குறியீட்டு வரம்புகளுக்குள் இருக்கும் போது, II ஆம் நிரலில் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்ட தொகையை 2026 ஆம் ஆண்டிற்கான வியாபார வரியாக விதித்து வசூலிக்கவும், வரிக்கு உட்பட்ட நபர் அவ்வியாபார வரியை 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**அட்டவணை 01**

| ***I நிரல்*** | ***II நிரல்*** |
|---|---|
| *தொடர் இல.* | *வரி விதிக்கப்படும் ஆண்டுக்கு முந்தைய ஆண்டில் வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட வருமான அளவு* |
| 01 | ரூ. 6,000.00 ஐ தாண்டாத போது |
| 02 | ரூ. 6,000.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 12,000.00 ஐ தாண்டாத போது |
| 03 | ரூ. 12,000.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 18,750.00 ஐ தாண்டாத போது |
| 04 | ரூ. 18,750.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 75,000.00 ஐ தாண்டாத போது |
| 05 | ரூ. 75,000.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 150,000.00 ஐ தாண்டாத போது |
| 06 | ரூ. 150,000.00 ஐ தாண்டும் போது |

11 - 230/1

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

உரிமக் கட்டணங்கள் விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 147 ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான இல. 06(20) II இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 1988.08.23 ஆம் திகதிய 520(7) ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாகாண பேரவை நிறுவனங்களுக்கான (மாதிரி துணைச் சட்டங்கள்) சட்டத்தின் முதல் மற்றும் இரண்டாவது பகுதிகளில் 01 முதல் 42 வரையிலான துணைச் சட்டங்களில் 21 ஆம் துணைச் சட்டத்திற்கு அமைய, எம்பிலிபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் கீழே அட்டவணை இல. 02 பகுதி I ஆபத்தான பகுதி II தொந்தரவு தரும் வியாபாரங்கள், பகுதி III ஆபத்தான மற்றும் தொந்தரவு தரும் வியாபாரங்கள் என அட்டவணைகளில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட வியாபாரங்களுக்கு எம்பிலிபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதேனும் இடம் அல்லது வளாகத்தைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கி 2026 ஆம் ஆண்டிற்கு வழங்கப்படும் உரிமத்திற்கு தொடர்புடையதாக அவ்வுப அட்டவணையின் II ஆம் நிரலில் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்ட உரிமக் கட்டணத்தை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து வசூலிக்கவும், வரிக்கு உட்பட்ட நபர் அவ்வுரிமக் கட்டணத்தை 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

மேலும், அவ்விடம் அல்லது வளாகம் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா வாரியச் சட்டத்தின் நோக்கங்களுக்காக சுற்றுலா வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோட்டல், உணவகம், தங்குமிடமாக இருக்கும் போது அதற்கு தொடர்புடைய உரிமம் வழங்கும் போது அவ்விடம் அல்லது வளாகத்தின் 2025 ஆம் ஆண்டு வருமானத்தில் 1% ஐ 2026 ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணமாக நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காகவும் எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**அட்டவணை - 02**

பகுதி I - ஆபத்தான வியாபாரங்கள்

| *தொ. இல.* | *I நிரல்* *தொழிலின் இயல்பு* | *II நிரல்* *ரூ. 750.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* | *ரூ. 750.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 1,500.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* |
|---|---|---|---|
| 01 | உணவகங்கள் | 500.00 | 750.00 |
| 02 | ஹோட்டல்கள் | 500.00 | 750.00 |
| 03 | அரிசி கடைகள்/உணவகங்கள் மற்றும் தேநீர்/ காப்பி கடைகள் | 500.00 | 750.00 |
| 04 | பேக்கரிகள் | 500.00 | 750.00 |
| 05 | பால் பட்டிகள் மற்றும் பால் வியாபாரம் | 500.00 | 750.00 |
| 06 | மீன் வியாபாரம் | 500.00 | 750.00 |
| 07 | இறைச்சி வியாபாரம் | 500.00 | 750.00 |
| 08 | பனிக்கட்டி தொழிற்சாலைகள் | 500.00 | 750.00 |
| 09 | குளிர்பான தொழிற்சாலைகள் | 500.00 | 750.00 |
| 10 | சலவை | 500.00 | 750.00 |
| 11 | கால்நடை கொட்டகைகள் | 500.00 | 750.00 |
| 12 | கொலை மாடுகள் | 500.00 | 750.00 |
| 13 | முடி அலங்காரம் (சலூன்கள் மற்றும் பார்பர் கடைகள்) | 500.00 | 750.00 |
| 14 | கல் வேலைகள் | 500.00 | 750.00 |
| 15 | அரிசி ஆலைகள் | 500.00 | 750.00 |
| 16 | கல் அரைத்தல் (ஆலைகள்) | 500.00 | 750.00 |
| 17 | சுண்ணாம்பு உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 18 | சோப்பு உற்பத்தி | 500.00 | 750.00 |
| 19 | வெல்டிங் பட்டறைகள் | 500.00 | 750.00 |

பகுதி II -தொந்தரவு தரும் வியாபாரங்கள்

| *தொ. இல.* | *I நிரல்* *தொழிலின் இயல்பு* | *II நிரல்* *ரூ. 750.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* | *ரூ. 750.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 1,500.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* |
|---|---|---|---|
| 01 | உணவகம் நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 02 | தங்குமிட வசதியுடன் கூடிய ஹோட்டல் நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 03 | பேட்டரி சார்ஜ் செய்யும் இடங்கள் | 500.00 | 750.00 |
| 04 | இனிப்புகள் மற்றும் பைட் வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 05 | சிரப் அல்லது பழ பானங்கள் தயாரிக்கும் இடங்கள் | 500.00 | 750.00 |
| 06 | மசாலா பொருட்கள் மற்றும் பல்வேறு உணவுப் பொருட்களை பேக் செய்து விற்பனை | 500.00 | 750.00 |

| *தொ. இல.* | *I நிரல்* *தொழிலின் இயல்பு* | *II நிரல்* *ரூ. 750.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* | *ரூ. 750.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 1,500.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* |
|---|---|---|---|
| 07 | குளிரூட்டப்பட்ட இறைச்சி, மீன் விற்பனை | 500.00 | 750.00 |
| 08 | முட்டை வியாபாரம் | 500.00 | 750.00 |
| 09 | பால் சார்ந்த உணவுகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 10 | அழகு நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 11 | கால்நடை பண்ணை நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 12 | பல் மருத்துவமனை நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 13 | உடனடி உணவு வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 14 | இறுதி ஊர்வல நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 |

பகுதி III தொந்தாவு தரும் வியாபாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01 | தையல் அரங்கு நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 02 | செங்கல் உற்பத்தி | 500.00 | 750.00 |
| 03 | காலியான பாட்டில்கள், பழைய இரும்பு வாங்குதல் | 500.00 | 750.00 |
| 04 | ஸ்ப்ரே பெயிண்டிங் | 500.00 | 750.00 |
| 05 | உர வகைகள் மற்றும் வேளாண்மை இரசாயன பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 |
| 06 | தேங்காய் ஆலை | 500.00 | 750.00 |
| 07 | பழைய பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 08 | சேவை மையங்கள் நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 09 | வாகன பழுதுபார்க்கும் இடங்கள் நடாத்துதல் | 500.00 | 750.00 |

11 - 230/2

---

## எம்பிலிபிட்டிய பிரதேச சபை

### தொழில் வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான எண் 06(20) III இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (I) ஆம் உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, எம்பிலிபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதேனும் வளாகத்தில் நடத்தப்படும் இங்கு கீழே இல. 03 அட்டவணையில் I நிரலில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தொழிலுக்கும் அவ்அட்டவணையின் II நிரலில் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்ட அளவிற்கு தொழில் வரியை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து வசூலிக்கவும், அத்தொழில் வரிக்கு உட்பட்ட நபர் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**அட்டவணை - 03**

| *I நிரல்* | | *II நிரல்* | |
|---|---|---|---|
| *தொ. இல.* | *தொழிலின் இயல்பு* | *ரூ. 750.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* | *ரூ. 750.00 ஐ தாண்டும் ஆனால் ரூ. 1,500.00 ஐ தாண்டாத போது ரூ. சதம்* |
| 01 | தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 500.00 | 750.00 |
| 02 | பனை எண்ணெய் உற்பத்தி | 500.00 | 750.00 |
| 03 | ஜாதிக்காய் உற்பத்தி | 500.00 | 750.00 |
| 04 | இயந்திரமற்ற தச்சு தொழில் | 500.00 | 750.00 |
| 05 | பித்தளை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 06 | ஆடை தைத்தல் | 500.00 | 750.00 |
| 07 | செங்கல் விற்பனை | 500.00 | 750.00 |
| 08 | அலங்கார பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 |
| 09 | புகைப்பட நிலையம்/ படங்கள் சட்டமிடுதல் | 500.00 | 750.00 |
| 10 | கோப்பரா மாடு நடாத்துதல் | 500.00 | 750.00 |
| 11 | கால்நடை உணவு உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 12 | சைக்கிள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 |
| 13 | விளம்பர பலகைகள்/ பேனர்கள் போஸ்டர்கள் தயாரித்தல் | 500.00 | 750.00 |
| 14 | காலணிகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 15 | மின்சாதனம் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 |
| 16 | கடிகாரம் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 |
| 17 | உலோக எழுத்து பலகைகள் வேலை | 500.00 | 750.00 |
| 18 | வானொலி /தொலைக்காட்சி இயந்திரங்கள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 |
| 19 | கணினி அலுவலக இயந்திரங்கள் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 |
| 20 | வீட்டு பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 21 | தேன் மற்றும் சர்க்கரை உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 |
| 22 | மொபைல் தொலைபேசி விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்/ கார்டுகள் விற்பனை | 500.00 | 750.00 |

## எம்பிலிபிட்டிய பிரதேச சபை

### விளம்பரங்கள் மற்றும் காட்சி சுற்றுச்சூழல் கட்டணங்கள் விதித்தல் - 2026

1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானியில் மாகாண பேரவை வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி துணைச் சட்டங்களின் 39 ஆம் துணைச் சட்டத்தின் 3(உ) பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான இல. 06 (20) IV இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

எம்பிலிபிட்டிய பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்திற்குள் விளம்பரங்களை காட்சிப்படுத்தும் போது 1988.08.23 ஆம் திகதிய 520/7 இலக்க வர்தமானியில் மாகாண பேரவை வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட மாதிரி துணைச் சட்டங்களின் 39 ஆம் துணைச் சட்டத்தின் 3 (உ) பிரிவுக்கு அமைய, எம்பிலிபிட்டிய பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் தெரு, பாதை, ஓடை, வழி அல்லது வானத்தில் தெரியும் வகையில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்ட இல. 04 அட்டவணைப்படி விளம்பர பலகை கட்டணங்களை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து வசூலிப்பது பொருத்தமானது என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**அட்டவணை - 04**

| *தொடர் இல.* | *விபரம்* | *கட்டணம்* | *கால அளவு* | *ரூ. சதம்* |
|---|---|---|---|---|
| 01 | மெழுகு துணி அல்லது துணியால் செய்யப்பட்ட விளம்பரத்திற்கு சதுர அடிக்கு | 25.00 | ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | |
| 02 | டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் செய்யப்பட்ட விளம்பரத்திற்கு சதுர அடிக்கு | 50.00 | ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | |
| 03 | எஃகால் செய்யப்பட்ட விளம்பரத்திற்கு (1) சதுர அடிக்கு | 100.00 | ஒரு வருடத்திற்கு | |
| 04 | மின்சார தொழில்நுட்பத்தால் இயங்கும் விளம்பர பலகைக்கு | 3000.00 | ஒரு வருடத்திற்கு | |

11 - 230/4

---

## எம்பிலிபிட்டிய பிரதேச சபை

### பொழுதுபோக்கு வரி சட்டத்தின் கீழ் வரி விதித்தல் - 2026

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (599 ஆம் அதிகாரம்) பொழுதுபோக்கு விரி கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் முதல் உபபிரிவின் கீழ் எம்பிவிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து

மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான எண் 06(20) V இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் முதல் உபபிரிவுக்கு அமைய, திரைப்பட காட்சி, மேஜிக் காட்சி, சர்க்கஸ் காட்சி, நாடக காட்சி, இசை காட்சிக்கு நுழைவு அட்டை மதிப்பில் 10% பொழுதுபோக்கு வரி செலுத்த வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

11 - 230/5

---

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

சொத்து வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான இல. 06 (20) VI இவ் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள், நிலங்கள், தோட்டங்களின் ஆண்டு மதிப்பிற்கு 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டை 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கும், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 134 (1) ஆம் உபபிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, அச்சொத்தில் மேற்கண்ட மதிப்பீட்டிற்கு ஆண்டு மதிப்பில் 5% ஆண்டு சொத்து வரியை நிர்ணயிக்க வேண்டும் என்பதற்கும்,

மேலும் 2025 ஆம் ஆண்டில் கீழே இல. 05 அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்னால் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு சொத்து வரியை எம்பிலிபிட்டிய பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்பதற்கும், அவ்வாறு ஆண்டு சொத்து வரியை 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது முதல் செலுத்துபவர் ஆண்டு சொத்து வரியின் அளவில் (10%) பத்து சதவீத தள்ளுபடியும், அவ்அட்டவணையில் ஒவ்வொரு காலாண்டிற்கு முன்னால் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் தொடர்புடைய சொத்து வரி தொகையை சபை நிதியத்திற்கு செலுத்தினால் ஒரு காலாண்டிற்கு தொடர்புடைய தொகையில் (5%) ஐந்து சதவீத தள்ளுபடியும் எம்பிலிபிட்டிய பிரசே சபையால் வழங்கப்பட வேண்டும் என்பதற்கும் தீர்மானிக்கப்படுகுறது.

**அட்டவணை - 05**

| *காலாண்டு* | *செலுத்த வேண்டிய திகதி* | *5% தள்ளுபடிக்கு உரிமை பெறும் இறுதி திகதி* |
|---|---|---|
| முதல் காலாண்டு | 2026.01.01 | 2026.01.31 |
| இரண்டாவது காலாண்டு | 2026.04.01 | 2026.04.30 |
| மூன்றாவது காலாண்டு | 2026.07.01 | 2026.07.31 |
| நான்காவது காலாண்டு | 2026.10.01 | 2026.10.31 |

11 - 230/6

---

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

நில விற்பனை மீது வரி வசூலித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான எண் 06(20) VII இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

எம்பிலிபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதேனும் நிலத்தை ஏலம் எடுப்பவர், மத்தியஸ்தர் அல்லது அவரது முதலாளி அல்லது துணை பிரதிநிதி மூலம் பொது ஏலத்தில் அல்லது வேறு வழியில் விற்கும் போது அந்நில விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் (1%) சமமான வரியை விற்பனையாளர், ஏலம் எடுப்பவர், மத்தியஸ்தர் அல்லது அவரது முதலாளி அல்லது துணை பிரதிநிதி மூலம் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

11 - 230/7

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

வருடாந்த சேவை கட்டணங்கள் விதித்தல் - 2026

எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு 2026 ஆம் ஆண்டிற்கு சேவை கட்டணங்கள் விதிப்பதற்காக 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற மஹாசபை கூட்டத்தில் தீர்மான இல. 06 (20) VIII இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் கீழே குறிப்பிடப்பட்ட இல. 06 உப அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு II ஆம் நிரலில் தொடர்புடைய சேவை கட்டணத்தை 2026 ஆம் ஆண்டிற்கு வசூலிக்க வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**உப அட்டவணை - 06**

| *தொடர் இல.* | *I நிரல்* | *II நிரல்* |
|---|---|---|
| 1 | தெரு வரைபடம் மற்றும் உரிமை இல்லா சான்றிதழ் வழங்குவதற்கான சேவை கட்டணம் | 2,000.00 |
| 2 | இறுதி ஊர்வலம் நடத்துவதற்கான சேவை கட்டணம் v பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் | 16,500.00 |
| | v பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே | 17,500.00 |
| 3 | நீர் இணக்க சான்றிதழ் வழங்குவதற்கான சேவை கட்டணம் | 200.00 |
| | மின்சார இணக்க சான்றிதழ் வழங்குவதற்கான சேவை கட்டணம் | 200.00 |
| 4 | கட்டிட விண்ணப்பம் வழங்குவதற்கான சேவை கட்டணம் | 1,000.00 |
| 5 | ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கான படிவம் வழங்குவதற்கான சேவை கட்டணம் | 500.00 |
| 6 | நீர் குழாய் இழுத்தல் போது சாலை தோண்டுவதற்கு (1) கான்கிரீட் சாலை 1 அடி அகலத்திற்கு (மீட்டருக்கு) | 1,650.00 |
| | (2) தார் சாலை 01 அடி அகலத்திற்கு (மீட்டருக்கு); | 1,150.00 |
| | (3) சரளை சாலை 1 அடி அகலத்திற்கு (மீட்டருக்கு) | 650.00 |
| | (4) தார்/கான்கிரீட் சாலைக்கு கீழே குழாய் இழுத்தல் | 750.00 |
| | (5) சாலையின் தோள் அருகே பள்ளம் தோண்டுதல் | 450.00 |
| 7 | மண், மணல், கல் போக்குவரத்துக்கு பிரதேச சபை சாலைகளைப் பயன்படுத்தும் போது கியூப் 1 க்கு | 100.00 |
| 8 | குப்பை கட்டணம் - குப்பை டன் 01 க்கு | 10,000.00 |

அபிவிருத்தி உரிமங்கள் வழங்குதல் மற்றும் கால நீட்டிப்புக்கான முற்பண கட்டணங்கள்

| *அபிவிருத்தி பணியின் இயல்பு* | | *செலுத்த வேண்டிய கட்டணம்* |
|---|---|---|
| 01. | நில உட்பிரிவுகளுக்கு | நிலத்தின் அளவு (ச.மீ.) |
| | | ச.மீ. 150 - ச.மீ. 300 |
| | | ச.மீ. 301 - ச.மீ. 600 |
| | | ச.மீ. 601 - ச.மீ. 900 |
| | | ச.மீ. 900 க்கு மேல் |
| 02. | எல்லை சுவர்கள் / தடுப்பு சுவர்கள் கட்டுதல் | மீட்டர் 1 க்கு |
| 03. | தொடர்பு கோபுரங்கள்/ ஆன்டெனா கோபுரங்கள்/ \| ஒலிபரப்பு கோபுரங்கள் கட்டுதல் | ரூ.40,000.00 |
| 04. | எரிபொருள் நிரப்பு நிலையங்கள்/ வாகன சேவை நிலையங்கள் / புகை பரிசோதனை நிலையங்கள் | ச.மீ. 1 க்கு |
| 05. | விளம்பர பலகைகள் | (i). டிஜிட்டல் விளம்பர பலகைகள் (ச.மீ. 1 க்கு) |
| | | (ii). டிஜிட்டல் அல்லாத விளம்பர பலகைகள் (ச.மீ.1 க்கு) |
| | | (iii). பெயர் பலகைகள் (ச.மீ. 1 க்கு) |
| | | (iv). சாலைக்கு மேலே சாலை வழியாக உள்ள விளம்பர பலகைகள் (Gantries) ச.மீ. 1 க்கு |
| 06. | குப்பை அகற்றும் மையங்கள்/ தற்காலிகமாக சேகரிக்கும் இடங்கள்/ உரம் மையங்கள்/ சுகாதாரமாக குப்பையைப் பயன்படுத்தி நிலம் நிரப்புதல் | ஹெக்டேர் 1 வரை |
| | | ஹெக்டேர் 1 க்கு மேல் |
| 07. | குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | தள பரப்பளவு (ச.மீ.) |
| | | ச.மீ. 400 வரை |
| | | ச.மீ. 401 - 1000 |
| | | ச.மீ. 1001-1500 |
| | | ச.மீ. 1501 - 2000 |
| | | ச.மீ. 2000 க்கு மேல் |
| 08. | வணிக நோக்கங்களுக்காக செய்யப்படும் | பரப்பளவு (ச.மீ.) |
| | | (i) நீச்சல் குளங்கள் (குளத்தின் டெக் உடன்) மற்றும் |
| | | (ii) சூரிய பேனல்களுக்கான கட்டணம் |
| 09. | (1) அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு மேலதிகமாக தள பரப்பளவு அதிகரிக்கும் வகையில் செய்யப்படும் மாற்றங்கள் மற்றும் கூட்டல்கள் | மொத்த முன்பண கட்டணத்தில் 25% + அதிகரிக்கும் கூடுதல் பரப்பளவிற்கான முன்பண கட்டணம் |
| | | (ii) தள பரப்பளவு மாற்றம் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்குள் செய்யப்படும் மாற்றங்கள் |
| 10. | அபிவிருத்தி உரிமத்தை வேறு தரப்புக்கு மாற்றுதல் | ரூ. 25,000.00 |
| 11. | அபிவிருத்தி உரிமத்தின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்தால் நீடித்தல் | (1) ச.மீ. 1000 வரை |
| | | (ii) ச.மீ. 1000 க்கு மேல் |

**மூடு அங்கீகாரம் வழங்குவதற்கான சேவை கட்டணங்கள் (முன்பண கட்டணங்களுக்கு மேலதிகமாக)**

| *அபிவிருத்தியின் இயல்பு* | | *செலுத்த வேண்டிய கட்டணம் (வரி அல்லாதது)* |
|---|---|---|
| 01. | தேவையான அங்கீகாரம் பெறாமல் செய்யப்பட்ட நில உட்பிரிவுக்கு | ஒரு துண்டுக்கு ரூ.3000.00 வீதம் |

| அபிவிருத்தியின் இயலிபு | | செலுத்த வேண்டிய கட்டணம் (வரி இல்லாதது) |
|---|---|---|
| 02. | அங்கீகாரம் இல்லாமல் கட்டிடங்கள் /கட்டுதல் / கூட்டுதல் / மீண்டும் கட்டுதல் | குடியிருப்பு (ச.மீ. 1 க்கு) ரூ: சென்: |
| | | (i) அடித்தள வேலை மட்டும் (கயிறு மட்டம்) முடிந்திருக்கும் போது |
| | | (ii) கூரை மட்டம் வரை கட்டுதல் டேம் மற்றும் பீம்கள் உட்பட (கூரை இல்லாமல்) |
| | | (iii) கூரையுடன் சுவர்கள் கட்டுதல் |
| | | (iv) குடியிருப்புக்கு ஏற்ற வகையில் முழுமையாக கட்டுதல் |
| | | (v) எல்லை சுவர்கள்/தடுப்பு சுவர்கள் கட்டுதல் |
| | | (vi) தொலைத்தொடர்பு ஒலிபரப்பு மற்றும் ஆன்டெனா கோபுரங்கள் கட்டுதல் |
| 03. | இணக்க சான்றிதழ் (COC) பெறாமல் குடியிருப்பு | ஒரு நாளுக்கு ரூ.100.00 |
| 04. | வாகன நிறுத்த இடங்கள் (வளாகத்திற்குள் வழங்கப்படாத போது ஒவ்வொரு நிறுத்த வாகன இடத்திற்கான சேவை கட்டணம் | ரூ.500,000 |
| | | (i) பிரதேச சபை |
| 05. | வாகன நிறுத்த இடங்களை வேறு பயன்பாடுகளுக்கு பயன்படுத்துதல் | ஒரு நிலத்திற்கு ரூ. 5.20,000 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டப்படி வாகன நிறுத்தத்திற்கு மாற்றப்படும் வரை ஆண்டுக்கு 10% அதிகரிப்புடன் |
| **இணக்க சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணங்கள்** | | |
| *அபிவிருத்தியின் இயல்பு* | | *செலுத்த வேண்டிய கட்டணம் (வரி அல்லாதது)* |
| 01. | நில உட்பிரிவுகள் | ஒரு துண்டுக்கு ரூ.1000 |
| | | தள பரப்பளவு (ச.மீ.) |
| 02. | கட்டிடங்கள் கட்டுதல் | ச.மீ. 400 வரை |
| | | ச.மீ. 400 க்கு மேல் |
| 03. | 3.தொடர்பு கோபுரங்கள் ஆன்டெனா கோபுரங்கள்/ ஒலிபரப்பு கோபுரங்களுக்கு | ரூ.5,000.00 |
| 04. | எல்லைச் சுவர்கள் மற்றும் தடுப்பு சுவர்கள் | மீற்றர் 1 க்கு ரூ.25 வீதம் |
| 05. | பொது கட்டிடங்களுக்கான இணக்க சான்றிதழ் புதுப்பித்தல் | ரூ.10,000.00 |

**பயன்பாடு மாற்றத்திற்கான சேவை கட்டணங்கள்**

| *முன்பண கட்டணம்* | *தள பரப்பளவு (ச.மீ.)* | *கட்டணம் (ரூபாய்) (வரி இல்லாதது)* |
|---|---|---|
| | 45 வரை | 1,000.00 |
| | 45 - 90 | 1,500.00 |
| | 91 - 180 | 1,750.00 |
| | 181 - 270 | 2,000.00 |
| | 271 - 450 | 2,500.00 |
| | 451 - 675 | 2,750.00 |
| | 676 - 900 | 3,000.00 |
| | 900 க்கு மேல் | சதுர மீற்றர் 900 க்கு மேல் அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றர் 90 க்கு ரூ. 500.00 வீதம் |

**அனுமதி பத்திரத்திற்கான கட்டணங்கள்**

| | |
|---|---|
| I. குடியிருப்பு பயன்பாட்டை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுதல் - சதுர மீட்டருக்கு | ரூ. 750.00 |
| II. குடியிருப்பு அல்லாத மற்ற பயன்பாட்டை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுதல் - சதுர மீட்டருக்கு | ரூ. 500.00 |

10. சுற்றுச்சூழல் உரிமம் பெறுதல் - பரிசோதனை கட்டணங்கள்

| | *பண ஆதாயம்* | *பரிசோதனை கட்டணம் ரூ. சென்* |
|---|---|---|
| i. | ரூ:250000 அல்லது அதற்கு குறைவு | 3,000.00 |
| ii. | ரூ. 250001 முதல் ரூ. 500000 வரை | 3,750.00 |
| iii. | ரூ. 500001 முதல் ரூ. 1000000 வரை | 5,000.00 |
| iv | ரூ. 1000000 க்கு மேல் | 10,000.00 |

11. சுற்றுச்சூழல் உரிமம் பெறுவதற்கான கட்டணம் - 4,500.00

11 - 230/8

---

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

சபைக்கு சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடுவதற்கான கட்டணங்கள் வசூலித்தல் - 2026

எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு 2026 ஆம் ஆண்டிற்கு இயந்திரங்கள் வாடகைக்கு விடுவதற்கான கட்டணங்கள் விதிப்பதற்காக 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பெரும் சபை கூட்டத்தில் தீர்மான இல. 06 (20) IX இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

2026 ஆம் ஆண்டிற்கு சபைக்கு சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடும் போது கீழே இல. 08 அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட சபையின் இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் இடங்களை வாடகைக்கு விடும் போது கீழே இல. 07 அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு II ஆம் நிரலில் தொடர்புடைய சேவைக் கட்டணத்தை விதித்து வசூலிக்க வேண்டும் என்பதற்காக எம்பிலிபிட்டிய பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகிறது.

**உப அட்டவணை - 07**

| *தொடர் இல.* | *I நிரல் விபரம்* | *II நிரல் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 01 | மோட்டர் கிரேடர் | மணிநேரத்திற்கு 6,000.00 (எரிபொருள் இல்லாமல்) |
| 02 | பேக்ஹோ இயந்திரம் | மணிநேரத்திற்கு 3,000 (எரிபொருள் இல்லாமல்) |
| 03 | டிப்பர் வாகனம் | 08 மணிநேர நாளுக்கு 12,000 (எரிபொருள் இல்லாமல்) |

| *தொடர் இல.* | *I நிரல் விபரம்* | *II நிரல் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 04 | டிராக்டர் | நாளுக்கு 5000 (எரிபொருள் இல்லாமல்) |
| 05 | கல் போலர்<br>போக்குவரத்துக்கு கி.மீ. 1 க்கு ரூ:175.00 வீதம் செலுத்த வேண்டும். (சேவை வழங்கும் இடத்திற்கு செல்ல மற்றும் திரும்ப 15கிமீ வரை கூடுதலாக 1 கிமீ க்கு ரூ.175 வீதம் 2625.00 செலுத்த வேண்டும்) | குடியிருப்பு - அதிகாரப் பிரதேசத்திற்குள் - 5000.00<br>அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே - 6000.00<br>வியாபாரம் - அதிகாரப் பிரதேசத்திற்குள் - 6000.00<br>அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே - 6500.00<br>போக்குவரத்துக்கு கி.மீ.1 க்கு ரூ:175 வீதம் செலுத்த வேண்டும் |
| 06 | நீர் போலர் | நாளுக்கு ரூ.2750.00 போக்குவரத்துக்கு கி.மீ.1 க்கு ரூ.122.00 வீதம் செலுத்த வேண்டும். (சேவை வழங்கும் இடத்திற்கு செல்ல மற்றும் திரும்ப) |
| 07. | விளையாட்டு மைதானங்கள் மற்றும் வாரந்தச் சந்தை | அரசியல் கூட்டங்களுக்கு நாளுக்கு ரூ.5,000.00<br>இசை நிகழ்ச்சிகளுக்கு நாளுக்கு ரூ.5,000.00 |
| | | விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளுக்கு நாளுக்கு ரூ. 2,000.00 |
| | | **உத்தரவாத படுதா தொகை** |
| | | காகேயாய விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | கும்புகொட ஆர விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | கட்டகல் ஆர விளையாட்டு மைதானம் - ரூ. 10,000.00 |
| | | காவந்திஸ்ஸ புர விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | வை.எஸ்.எஸ். விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | குட்டிகல் ஜயதிமாபியபுர விளையாட்டு மைதானம் ரூ. 5,000.00 |
| | | குட்டிகல் விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | வீரசிங்ஹபுர விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | கணபெண்டி ஆர விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | முதுன்மங்கட விளையாட்டு மைதானம் - ரூ. 10,000.00 |
| | | மஹ ஆர விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | தியபொட விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | பதல்கொடெல்ல விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | அக்கர பனஹ விளையாட்டு மைதானம் ரூ. 5,000.00 |
| | | தித்தவெல்பொத விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | வெல்லவ விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | கல்கொரிய ஹந்திய விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | பிபிலெகமய விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | பஹல் ஆதொலுவ விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | மத்திய ஆதொலுவ விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | லெடியாகல் விளையாட்டு மைதானம் - ரூ. 5,000.00 |
| | | வராக்கெடி ஆர விளையாட்டு மைதானம் - ரூ. 10,000.00 |
| | | 42 வாரச்சந்தை நிலம் - ரூ. 10,000.00 |
| | | உடவலவ வாரச் சந்தை வளாகம் - ரூ. 10,000.00 |
| | | துங்கம வாரச் சந்தை வளாகம் - ரூ. 15,000.00 |
| | | பல்லேபெத்த வாரச் சந்தை வளாகம் - ரூ. 20,000.00 |
| | | பனமூர வாரச் சந்தை வளாகம் - ரூ. 10,000.00 |
| | | கொழும்பெகேயார வாரச் சந்தை வளாகம் - ரூ. 5,000.000 |

| *தொடர் இல.* | *I நிரல் விபரம்* | *II நிரல் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| | | 2 ஆவது கால்வாய் வாரச் சந்தை வளாகம் 5,000.00 |
| | | முல்அன்டியாவல வாரச் சந்தை வளாகம் - 10,000.00 |
| | | பல்லேபெத்த உப அலுவலக வளாகம் -10,000.00 |
| | | உடவலவ உப அலுவலக வளாகம் - 10,000.00 |

11 - 230/9

---

**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி விதிப்பு - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற மஹ சபை கூட்டத்தில் தீர்மான இல. 06(20) இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வைத்தியர் டபிள்யூ. வசந்த குமாரசிறி,
தவிசாளர்,
எம்பிலிட்டிய பிரதேச சபை,
துங்கம.

பிரதேச சபை அலுவலகம்,
துங்கம,
2025, ஒற்றோபர் 22.

**தீர்மானம்**

எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் எல்லைக்குள் முன்னேற்றமடைந்த கிராமப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்துள்ள, 20 பேர்ச் நிலப்பரப்பை விட அதிகமான அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படும்போது:

(அ). அக்கணியில் எந்தவொரு கட்டிடமும் கட்டப்படாமல் இருக்கும்போது, அல்லது
(ஆ). உண்மையில் கட்டிடங்களால் மூடப்பட்ட நிலப்பரப்பின் விகிதாசாரம் 1.5 ஆக இருக்க வேண்டும், மற்றும்
(இ). அந்தக் காணி முறையாகவோ அல்லது நிரந்தரமாகவோ பயிரிடுதலுக்கு உட்படுத்தப்படாதபோது,

அந்தக் காணியின் மூலதன நிலப் பெறுமதியில் 0.001% வரியாக 2026 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்று, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153

(1) (அ) உப பிரிவின் கீழ் தீர்மானிக்கப்படுகிறது.

முறையான அல்லது நிரந்தரமான பயிரிடுதல் என்பது ஒவ்வொரு பயிருக்கும் பொருத்தமான அரச நிறுவனங்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பயிரிடுதலாகும்.

11 - 230/10

## ஹங்குரன்கெத்த பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 மற்றும் 146 ஆவது பிரிவுகளின் கீழ் ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு வரி விதித்தல் பின்வரும் வகையில் அமைதல் வேண்டுமென்ற முன்மொழிவு (ஓ) (4) (vii) இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜே.எம்.ஏ.ஜீ. லயனல் குணரத்ன,
தவிசாளர்,
ஹங்குரன்கெத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹங்குரன்கெத்த.
2025, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்கீழ் ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விருத்தி செய்யப்பட்ட பின்வரும் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு அசையாத சொத்துக்கள் மீதும் 2025 ஆம் ஆண்டின் கணிப்பீட்டை 2026 ஆம் ஆண்டின் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதெனவும்,

(ஆ) குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆவது உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விருத்தி செய்யப்பட்ட பின்வரும் பின்வரும் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ள வயல் நிலங்கள் தவிர்நத்த ஒவ்விொரு அசையாத சொத்தின் ஆண்டுப் பெறுமதியின் எதிரில் காட்டப்பட்டுள்ள வீதத்துக்கு அமைவான மதிப்பீட்டு வரியை விதித்து அறவிடுவதெனவும்,

(இ) குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (6) மற்றும் (7) ஆவது உப பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த ஆண்டுக்கென விதிக்கப்படும் மதிப்பீட்டு வரியை 2026 ஆம் ஆண்டு மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் நான்கு சமமான காலாண்டுகளுக்குள் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென விதிப்பதெனவும், 2026 ஆம் வருடத்துக்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2026 சனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய மதிப்பீட்டு வரியை ஒவ்வொரு காலாண்டின் முதலாவது மாதம் முடிவடைய முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் ஐந்து வீதம் (5%) கழிவாக வழங்கப்படும் எனவும் ஹங்குரன்கெத்த பிரதேச சபை முன்மொழிகின்றது.

### அட்டவணை -01

| | *விருத்தியடைந்த பிரதேசங்கள்* | *வீதம்*<br>*வதிவிடங்கள் மற்றும் வர்த்தகங்கள்* |
|---|---|---|
| 01. | ஹங்குரன்கெத்த<br>(கவிசிந்தமணி அபேசிங்ஹ மாவத்த, கண்டி வீதி, ராகல வீதி, பராக்கரம வீதி, சொய்சா வீதி, கொட்டுவேகெதர வீதி, அதிகாரிகம வீதி தமுனுமெய வீதி) | 7% |
| 02. | ரிக்கில்லகஸ்கட<br>(திம்புல்கும்புர வீதி, ரத்மெட்டிய வீதி, ரிக்கில்லகஸ்கட வீதி, ஹேவாஹட்ட வீதி, மகுருப்ப வீதி, கண்டி வீதி, ராகல வீதி) | 7% |
| 03. | ஹேவாஹெட்ட (ரிக்கில்லகஸ்கட வீதி) | 7% |

**ஹங்குரன்கெத்த பிரதேச சபை**

பயிர்ச்செய்கை வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 140 மற்றும் 134 ஆவது பிரிவுகளின் 3 ஆவது மற்றும் 6 ஆவது உப பிரிவுகளின் கீழ் ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2026 ஆம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கை வரி விதித்தல் பின்வரும் வகையில் அமைதல் வேண்டுமென்ற முன்மொழிவு (ஓ) (4) (viii) இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜே.எம்.ஏ.ஜீ. லயனல் குணரத்ன,
தவிசாளர்,
ஹங்குரன்கெத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹங்குரன்கெத்த.
2025, ஒற்றோபர் 14.

**தீர்மானம்**

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின், 146 ஆவது பிரிவின் (1) ஆவது உப் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் பயிர்ச்செய்கை வரிக்கு உட்படும் ஒவ்வொரு காணியினதும் 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கணிப்பீட்டை 2026 ஆம் ஆண்டின் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதெனவும்.

(ஆ) 134 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி.

**அட்டவணை**

| *காணியின் அளவு* | *வரித்தொகை அளவு* |
|---|---|
| அந்தந்த காணியின் அளவு 5 ஹெக்டயருக்குக் குறைவான ஆனால் I ஹெக்யேடருக்குக் குறைவில்லாத சந்தர்ப்பத்தில் | ரூ. 50.00 |
